ஓம் நமோ நாராயணாய



ஸ்ரீ பூமிநீளா ஸ்ரீ கல்யாண சுந்தரவல்லி சமேத ஸ்ரீ சுந்தரராஜ பரப்ரஹ்மணே நம



**எதிர்சேவை**

**11.05.2025 காலை 5.30 மணிமுதல் 6.30 மணிக்குள்**

சிந்தூர செம்பொடிப் போல் திருமாலிருஞ்சோலையெங்கும்
இந்திர கோபங்களே யெழுந்தும் பரந்திட்டனவால்
மந்திரம் நாட்டியன்று மதுரக்கொழுஞ் சாறு கொண்ட
சுந்தரத்தோளுடையான் கழலையில் நின்றுய்துங்கொலோ

**- ஆண்டாள்**

**வைகையாற்றில் எழுந்தருளல்**

**12.05.2025 காலை 05.45 மணிமுதல் 6.05 மணிக்குள்**

முடிச்சோ தியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ
அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ
படிச்சோதி யாடையொடும் பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதி கலந்ததுவோ திருமாலே கட்டுரையே!

**- நம்மாழ்வார்**

## அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலின் பசலி ஆண்டு 1434, பொது ஆண்டு 2025

# சித்திரைப் பெருந்திருவிழா அழைப்பிதழ்

| நாள் | ஸ்ரீ விஸ்வாவசு ஆண்டு சித்திரை மாதம் | | அருள்மிகு பெருமாள் எழுந்தருளும் இடம் | எழுந்தருளும் காலம் | புறப்படும் காலம் | நிகழ்ச்சி விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 08.05.2025 | வியாழன் | 25 | திருக்கல்யாண மண்டபம் – அழகர்கோயில் | மாலை 06 : 30 | மாலை 07 : 15 | தோளுக்கினியான் |
| 09.05.2025 | வெள்ளி | 26 | திருக்கல்யாண மண்டபம் – அழகர்கோயில் | மாலை 06 : 00 | மாலை 07 : 00 | தோளுக்கினியான் |
| 10.05.2025 | சனி | 27 | திருக்கல்யாண மண்டபம்<br>கொண்டப்பநாயக்கர் மண்டபம்<br>பொய்கைகரைப்பட்டி<br>கள்ளந்திரி<br>அப்பன்திருப்பதி ஜமீன்தார் மண்டபம் | காலை 06 : 00<br>மாலை 05 : 15<br>இரவு 07 : 15<br>இரவு 08 : 45<br>இரவு 10 : 45 | காலை 07 : 00<br>இரவு 06 : 15<br>இரவு 08 : 15<br>இரவு 09 : 15<br>இரவு 11 : 15 | தோளுக்கினியான்<br>**தங்கப்பல்லக்கில் கள்ளர் திருக்கோலத்தில் மதுரைக்கு புறப்படுதல்** |
| 11.05.2025 | ஞாயிறு<br> | 28 | சிவகங்கை சமஸ்தானம் மறவர் மண்டபம், சுந்தரராஜன்பட்டி<br>கடச்சனேந்தல்<br>**மூன்றுமாவடி**<br>அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் புதூர்<br>அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் ரிசர்வ்லைன்.<br>அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் அவுட் போஸ்ட்.<br>அம்பலகாரர் மண்டபம்<br>தல்லாகுளம் அருள்மிகு பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயில் | அதிகாலை 01 : 00<br>காலை 02 : 30<br>காலை 05 : 30<br>காலை 08 : 30<br>பகல் 11 : 30<br>மாலை 04 : 30<br>மாலை 04 : 50<br>இரவு 08 : 30 | அதிகாலை 02 : 00<br>காலை 03 : 00<br>காலை 06 : 30<br>காலை 08 : 35<br>பகல் 12 : 30<br>மாலை 04 : 45<br>மாலை 05 : 30<br>இரவு 11 : 30 | **எதிர்சேவை**<br>அருள்மிகு பெருமாள் திருமஞ்சனமாகி தங்கக்குதிரை வாகனத்தில் சாத்துப்படி ஆனதும் திருவில்லிபுத்தூர் சூடிக்கொடுத்த நாச்சியார் அருள்மிகு ஆண்டாளுடைய திருமாலையை சாற்றி பக்த கோடிகளுக்கு சேவை சாதித்தல் வெட்டிவேர் சப்பரம். |
| 12.05.2025 | திங்கள்<br> | 29 | அருள்மிகு கருப்பணசாமி திருக்கோயில்<br>**வைகை ஆற்றில் எழுந்தருளல்**<br>**வைகை ஆற்றிலிருந்து புறப்பாடு**<br>இராமராயர் மண்டபம்<br>வண்டியூர் அருள்மிகு வீரராகவப் பெருமாள் திருக்கோயில் | அதிகாலை 02 : 30<br>**காலை 05.45 மணிக்குமேல் 06.05 மணிக்குள்**<br>பிற்பகல் 12 : 00<br>இரவு 09 : 00 | அதிகாலை 03 : 00<br>காலை 07 : 25<br>பிற்பகல் 03 : 00 | **ஆயிரம் பொன் சப்பரம்**<br>**வைகை ஆற்றில் எழுந்தருளல்**<br>வையாழி ஆனவுடன் அருள்மிகு வீரராகவப்பெருமாளுக்கு மாலை சாத்துதல்<br>**அங்கப்பிரதட்சணம்**<br>வண்டியூர் பெருமாள் கோயில் எழுந்தருளல் |
| 13.05.2025 | செவ்வாய்<br> | 30 | வண்டியூர் கோயிலிலிருந்து புறப்பாடு<br>**தேனூர் மண்டபம்**<br>அருள்மிகு அனுமார் திருக்கோயில்<br>இராமராயர் மண்டபம் | -<br>-<br>காலை 11 : 30<br>பிற்பகல் 03 : 30<br>இரவு 10 : 00 | காலை 06 : 00<br>காலை 09 : 00<br>பிற்பகல் 03 : 00<br>பிற்பகல் 04 : 00 | திருமஞ்சனம் கண்டருளி சைத்தியோபசாரம் ஏகாந்த சேவை பத்தி உலாவுதல்.<br>திருமஞ்சனமாகி **சேஷ வாகனத்தில்** தேனூர் மண்டபத்திற்கு எழுந்தருளல்.<br>திருமஞ்சனமாகி பிறகு கருட வாகனாரூடராய் பிரசன்னமாகி **மண்டுக முனிவருக்கு சாபம் தீர்த்து காட்சி தந்தருளல்**<br>அங்கப்பிரதட்சணம்<br>திருமஞ்சனம் – **தசாவதாரம்.** |
| 14.05.2025 | புதன் | 31 | இராமராயர் மண்டபம்<br>இராமராயர் மண்டபம்<br>**இராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபம்** | காலை 06 : 00<br>இரவு 11 : 00 | பிற்பகல் 02 : 00<br>- | மோகினி அவதாரத்துடன் பக்தி உலாவுதல்<br>திருமஞ்சனம் அதன்பின் **அனந்தராயர் பல்லக்கில் இராசாங்க திருக்கோலத்துடன் எழுந்தருளல்.**<br>திருமஞ்சனம் |
| 15.05.2025 | வியாழன் | 01 | இராமநாதபுரம் மன்னர் சேதுபதி மண்டபம்<br>மாரியம்மன் திருக்கோயில் (அவுட்போஸ்ட்)<br>அம்பலகாரர் மண்டபம்<br>மூன்று மாவடி<br>சிவகங்கை சமஸ்தானம் மறவர் மண்டபம் சுந்தரராஜன்பட்டி | காலை 06 : 00<br>காலை 07 : 00<br>இரவு 07 : 00<br>இரவு 10 : 00 | அதிகாலை 02 : 30<br>காலை 07 : 00<br>காலை 08 : 00<br>இரவு 08 : 30<br>இரவு 01 : 00 | **பூப்பல்லக்கில்** கள்ளர் திருக்கோலத்துடன் அருள்மிகு கருப்பணசுவாமி கோயில் சன்னதியில் வையாழியானவுடன் திருமாலிருஞ்சோலைக்கு திரும்புதல்<br>கள்ளர் திருக்கோலத்துடன் வழிநடையாக<br>கள்ளர் திருக்கோலத்துடன் வழிநடையாக<br>கள்ளர் திருக்கோலத்துடன் வழிநடையாக<br>திருமஞ்சனமாகி வழிநடையாக |
| 16.05.2025 | வெள்ளி | 02 | **அப்பன் திருப்பதி ஜமீன்தார் மண்டபம்**<br>**கள்ளந்திரி**<br>**அழகர்கோயில்** | அதிகாலை 03 : 00<br>காலை 07 : 00<br>**10.00 மணிக்குமேல் 10.25 மணிக்குள்** | அதிகாலை 04 : 00 | வழிநடையாக<br>வழிநடையாக<br>இருப்பிடம் சேர்தல் |
| 17.05.2025 | சனி | 03 | **அழகர்கோயில்** | - | - | **உற்சவசாந்தி** |

பெருமாள் மண்டபத்திற்கு எழுந்தருளியவுடன் நிவேதனங்களைத் தயாராக வைத்துக் கண்டருளப்பண்ணி, பரிவட்டம் முதலிய பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மூன்று நிமிடத்திற்குள் செய்து கொள்ளத் தவறினால் பெருமாளை அடுத்த மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்யப்படும். அருள்மிகு பெருமாளுக்கு சாத்தப்படும் பரிவட்டம் அசல்பட்டு பரிவட்டம் தவிர போலிப்பட்டு சாத்தப்படமாட்டாது. ராஜீகத்தாலும், தெய்வீகத்தாலும் ஏற்படும் மாறுதல்களுக்கு திருக்கோவில் பொறுப்பேற்காது. மண்டகப்படிதாரர்கள் அருள்மிகு பெருமாள் எழுந்தருளுவதற்கு தகுந்தபடி பந்தல்களை உயரமாகவும், அகலமாகவும் விளக்குகள், வாழைமரம் தோரணங்கள், ஒலிபெருக்கி, மின்வயர்கள் வாகனங்களில் தட்டாமலும் இருக்குமாறு அமைக்க வேண்டும். இல்லையேல் அருள்மிகு பெருமாளை அடுத்த மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்யப்படும்.

**வி.ஆர்.வெங்கடாசலம்**
அறங்காவலர் குழுத்தலைவர்

**ந.யக்ஞ நாராயணன்** பி.பி.ஏ., பி.எல்.,
துணை ஆணையர் / செயல் அலுவலர்

**அறங்காவலர்கள்**

**அ.பாண்டியராஜன், ஆ.செந்தில்குமார், ரா.ரவிக்குமார், பி.மீனாட்சி**

**அயல்பணி கண்காணிப்பாளர்கள் & திருக்கோயில் பணியாளர்கள்**

Scanned with OKEN Scanner



மண்டுக முனிவருக்கு சாப விமோசனம் கொடுக்கும் பொருட்டும், "**சுந்தரத்தோளுடையான்**" என்று அருள்மிகு ஆண்டாள் மங்களாசனம் செய்து சுந்தரத்தோள்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை ஆண்டாள் சாற்றிக்கொண்ட திருமாலையை ஏற்றுக்கொள்ளும் பொருட்டும். சுந்தரராஜப்பெருமாள் "**கள்ளர் திருக்கோலத்துடன்**" மதுரையம்பதிக்கு எழுந்தருளி நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டபடி விழா நடைபெறுகிறபடியால், பக்தகோடிகள் விழாவில் கலந்து கொண்டு வேண்டுவோருக்கு வேண்டுவன வழங்கும் எம்பெருமாளை தரிசிக்குமாறு திருக்கோயில் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## பக்தர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

மதுரைக்குப் பெருமை சேர்க்கும் அழகர் மலையையும், திருக்கோயிலையும் அழகாக வைத்துக் கொள்வது நம் அனைவரின் கடமையாகும், எனவே இங்கு வரும் பக்தர்கள் நெகிழிப் பொருட்களால் ஆன பருகு கலன்கள், பைகள் மற்றும் உறைகளை கொண்டுவர வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி

துணை ஆணையர் / நிர்வாக அதிகாரி,

**அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோவில்.**

மேலூர் வட்டம், மதுரை மாவட்டம், தமிழ்நாடு.

Website : www.alagarkoilkallalagar.hrce.tn.gov.in

E-mail ID : dcmreomdu_32123.hrce@tn.gov.in ❖ alagarkovilmadurai@gmail.com

## இறைப்பணியில்.....

மந்திகுளம், **A.P.K.ராமமூர்த்தி M.A.**, Cell : 97869 94788

S/o.**A.P.காயாம்புக்கோனார்**

**R.முகிலன்** M.Sc., **R.ஜனாகிருஷ்ணன்** B.Com.(CA)., MBA.,

ஓம் நமோ நாராயணாய

ஸ்ரீ பூமிநீளா ஸ்ரீ கல்யாண சுந்தரவல்லி சமேத ஸ்ரீ சுந்தரராஜ பரப்ரஹ்மனே நம:

திருமாலிருஞ்சோலை

# அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்

## அழகர்கோவில்



**பசலி ஆண்டு 1434, பொது ஆண்டு 2025**

# சித்திரைப் பெருந்திருவிழா அழைப்பிதழ்

**08.05.2025 முதல் 17.05.2025 வரை**

***12.05.2025* திங்கட்கிழமை**

**காலை *05.45* மணிக்குமேல் *06.05* மணிக்குள்**

**வைகை ஆற்றில் எழுந்தருளல்**